# நியூ சவுத் வேல்ஸ் குடியேற்ற உத்தி

## ஜனவரி 2023 - ஜூன் 2025

நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கத்தின் குடியேற்ற உத்தியானது நியூ சவுத் வேல்சில் வாழும் அகதிகளுக்கான குடியேற்றத்தின் பலன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த உத்தி மாநிலத்திலேயே மற்றும் ஆஸ்திரேலியாவிலேயே முதல் முறையாகும், அத்துடன் இது அகதிகளுக்காகவும், சமூகத்திற்காகவும் ஆறு குறுகிய கால பலன்களை அடைவதற்காகச் செயல்படுகிறது.

தாங்கள் புரிந்து கொள்ளக்கூடிய மற்றும் ஈடுபடக்கூடிய உரிய சேவைகள் மற்றும் தகவல்களை அகதிகள் அணுகலாம்

அகதிகளுக்குச் சமூக ரீதியில் மற்றும்/அல்லது பொருளாதார ரீதியில் பங்கேற்க வாய்ப்புகள் மற்றும் ஆதரவு உள்ளது

சமூகத்திற்குள் மக்களை வரவேற்பது உட்பட, இட அடிப்படையிலான மற்றும் சமூகத்திற்கான வலைப்பின்னல்கள் குடியேற்றத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன







நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கத்தின் குடியேற்றத் திட்டம் மற்றும் மதிப்பீட்டுக்கு நேரடி அனுபவத்தின் மூலம் தெரிவிக்கப்படுகிறது

சான்றுகள் அடிப்படையிலான குடியேற்றத் திட்டத்தை ஆதரிப்பதற்காக நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கம், தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வுச் செயல்முறைகளை மேம்படுத்தியுள்ளது

குடியேற்ற இலக்குகள், கொள்கை, மற்றும் பலன்கள் பற்றி தேசிய அளவிலான முடிவெடுப்பதில், நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கத்தின் அழுத்தம் அதிகரித்துள்ளது

**இந்த உத்தியானது நியூ சவுத் வேல்சில் உள்ள சிக்கலான குடியேற்றச் சூழலையும், மேலும் அரசு மற்றும் அரசு சாரா துறையின் அனைத்து நிலைகளும் இணைந்து செயல்பட்டு அடைய வேண்டிய நீண்ட கால பலன்களையும் அங்கீகரிக்கிறது.**

**நியூ சவுத் வேல்ஸ் குடியேற்ற உத்தியானது, குடியேற்றப் பயணத்தின் முதல் 10 ஆண்டுகளுக்குள் இருக்கும், மற்றும் நியூ சவுத் வேல்சில் வாழும் அகதிகள் மீது முதலில் கவனம் செலுத்துகிறது.**
**நியூ சவுத் வேல்ஸ் குடியேற்ற உத்தியின் நோக்கங்களுக்காக, 'அகதிகள்' என்ற சொல்லானது, புகலிடம் கோரும் மக்கள் உட்பட, அகதிகள் மற்றும் அகதிகள் போன்ற பின்புலங்கள் உள்ள அனைவரையும் உள்ளடக்கியது.**

**இந்த உத்தி பின்வரும் வகையில், தற்போதைய மற்றும் புதிய நியூ சவுத் வேல்ஸ் அரசாங்க முயற்சிகளை ஒன்றிணைக்கிறது:**

- குடியேற்றப் பயணங்கள் என்று நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கம் எதைக் குறிக்கிறது, மேலும் வெற்றிகரமான குடியேற்றம் என்றால் என்ன என்பனவற்றை வெளிப்படுத்தல்
- முடிவெடுப்பதில் நேரடி அனுபவத்தின் குரலை இணைத்தல்
- நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கம் முழுவதுமாக ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு, தீர்வுத் திட்டம் மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்துதல் மற்றும் முறைப்படுத்தல்
- வெற்றிகரமான குடியேற்றப் பலன்களை உறுதி செய்ய நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கம் முழுவதுமாகத் தொடர்ச்சியான முன்னேற்றம், மதிப்பீடு மற்றும் திறன் மேம்பாட்டை உறுதி செய்தல்
- அகதிகள் வளமுறுவதை உறுதி செய்ய, பரந்த அளவில் அனைத்து செயல் புரிவோர் மற்றும் சமூகத்தினரை ஈடுபடுத்தல்
- தேசிய அளவில் முடிவெடுப்பதில் அழுத்தம் கொடுப்பதற்காக காமன்வெல்த், பிற மாநிலங்கள் மற்றும் பிரதேசங்கள் மற்றும் உள்ளூர் அரசாங்கங்களுடன் தற்போதுள்ள உத்திக்கான கூட்டாண்மைகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்தல்

### நியூ சவுத் வேல்ஸ் குடியேற்ற உத்தியில் பின்வருவன அடங்கும்:

**செயல் திட்டம் –** இது நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கம் தற்போதைய முன்னெடுப்புகளை எவ்வாறு தொடர்ந்து வலுப்படுத்துவது, மற்றும் அடையாளம் காணப்பட்ட இடைவெளிகளை நிரப்புவதற்குக் கூடுதல் முன்னெடுப்புகளை எவ்வாறு செயல்படுத்துவது என்பதைக் கோடிட்டுக் காட்டும்

**மதிப்பீட்டுக் கட்டமைப்பு** - இது முன்னேற்றத்தை கண்காணிக்கவும் அளவிடவும் நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கத்துக்கு உதவும், அத்துடன் நியூ சவுத் வேல்சில் வளர்ந்து வரும் தேவைகளுக்குப் பதிலளிக்கக்கூடிய தகவல்களைக் கொண்டிருக்கும்

**நியூ சவுத் வேல்ஸ் குடியேற்ற உத்தி என்பது பன்முகக் கலாச்சார நியூ சவுத் வேல்சுக்கான ஓர் உத்தி ரீதியான முன்னுரிமையாகும். மேலும் இது நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கத்தால் செயல்படுத்தப்படுகிறது.**